# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.41 (L.W.66)

| | | | |
|---|---|---|---|
| Name | Amudha | Caste | SC |
| Father's Name | புகழேந்தி | Calling | கூலி |
| Village | பொன்னகர் | Religion | |
| Taluk | திருப்பத்தூர் | Age | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.02.2025.

(A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.15 P.M.**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள். எனது கணவர் ஆட்டோ ஓட்டுநராக உள்ளார். நான் இதற்கு முன்பு அகரஞ்சேரியில் 2013-ல் ஷூ கம்பெனியில் வேலை செய்து வந்தேன். பவித்ரா என்ற பெண் என்னுடன் வேலை செய்து வந்தார். அவர் அந்த கம்பெனியில் எனக்கு முன்பாகவே வேலை பார்த்து வந்தார்.

நானும் பவித்ராவும் தோழிகள். எனக்கு 2015-ல் காலில் அடிப்பட்டுவிட்டது. நான் அதனால் வீட்டில்தான் இருந்தேன். அந்த பவித்ரா என்ற பெண் காணாமல் போனதாக 2015-ல் 6-ம் மாதம் 3-ம் தேதி எங்கள் வீட்டிற்கு பள்ளிக்கொண்டா போலீசார் வந்து பவித்ரா என்ற பெண் காணாமல் போனது விஷயமாக விசாரித்தார்கள்.

எனக்கு தெரியாது என்று நான் சொன்னேன். அதன்பிறகு என் கணவர், செந்தில், சரவணன் ஆகிய மூவரையும் போலீசார் வந்து வேனில் அழைத்துச்சென்றார்கள். பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள். அங்கு நானும் சென்றேன். 3–ம் தேதி, 6–ம் மாதம் நாங்கள் சென்றோம். என்னை பெண் போலீஸ் விசாரித்தாரகள். அவர்களை ஆண் போலீசார் விசாரித்தார்கள்.

பவித்ரா காணாமல் போனது எங்களுக்கு தெரியுமா என்று கேட்டார்கள். எங்களுக்கு தெரியாது என்று சொன்னோம். உங்களுக்கு தெரியும் என்று சொன்னார்கள், நாங்கள் தெரியாது என்றோம். மறுபுறம் எனது கணவர் மற்றும் பிறரை விசாரிக்கும்போது அடித்ததாக எனது கணவர் கத்திய சத்தம் கேட்டது. எனது கணவர் மற்றும் பிறர் வெளியில் வந்தவுடன் அவர்களை விசாரித்தபோது எனது கணவர் அவரை போலீசார் வலது காலில் அடித்ததாக கூறினார். எனது கணவரை அடித்த போலீசார் பெயர் மார்டின் பிரேம்ராஜ் என்று கூறினார்.

தொடர்ந்து 13 நாட்களாக விசாரணைக்கு சென்றோம். காலை 10.00 மணிக்கு செல்வோம். மாலை 06.00 மணிக்கு திரும்பி வருவோம். பவித்ராவை கண்டுப்பிடித்தீர்களா என்று கேட்பார்கள். 16–ம் தேதி அழைத்து மதியம் 02.00 மணிக்கு எங்களை அழைத்து கையொப்பம் வாங்கிக்கொண்டு இனிமேல் நாங்கள் கூப்பிடும்போது வந்தால் போதும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

அ.த.சா.ஆ.37–ல் 11–வது பக்கத்தில் நான்கு கையொப்பம் உள்ளது. அதில் ஒரு கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.64.

அந்த கையொப்பம் ஒளிநகல் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்பதால் அதை குறியீடு செய்ய எதிரிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. அது குறித்து வழக்கின் இறுதியில் வாதுரைக்கலாம். அதோடு பத்து நாட்கள் கழித்து ஷமீல் பாஷா என்ற ஆண் பவித்ரா காணாமல் போன வழக்கு தொடர்பாக போலீசார் விசாரிக்க அழைத்துச்சென்று அடித்து அவர் இறந்துவிட்டதாக தெரிந்துக்கொண்டோம்.

ஷமீல் பாஷாவை நான் வேலை செய்யும்போது வேலை தொடர்பாக பார்த்திருக்கிறேன். அவர் ஆம்பூர் பரிதா தோல் கம்பெனியில் இருந்து தோல்களை எடுத்துவந்து அகரஞ்சேரி டெல்டா கம்பெனியில் தோல்களை கொடுப்பார். இரண்டும் ஒரே கம்பெனி ஆகும். அகரஞ்சேரியில் ஷமீல்பாஷா தோலை கொண்டு வந்து கொடுக்கும்போது பவித்ரா அந்த தோல்களை வாங்கி கணக்கு வைத்து எங்களுக்கு வேலை செய்ய பகிர்ந்தளிப்பார். அ.த.சா.ஆ.14–ல் 7 வது தாளில் உள்ள ஒளிநகல் நிழற்படம் ஷமீல் பாஷா ஆவார்.

சிபிசிஐடி போலீசார் பத்து நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்திலும் என்னை அழைத்து விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் நான் கையெழுத்து போட்டேன். காவல் நிலையத்தில் என்னை பெண் போலீசார் விசாரித்தார்கள். ஆண் போலீசார் யாரையும் நான் பார்க்கவில்லை. மார்டின் போலீஸ் அதிகாரியின் பெயரை என் கணவர் அன்றைய தினம் என்னிடம் சொன்னார். நீதிமன்றத்தில் வாக்குமூலம் தரும்போது என்னிடம் கையெழுத்து பெற்றார்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். சிபிசிஐடி போலீசாரிடம் நான் கொடுத்த கு.வி.மு.ச.161 வாக்குமூலத்தில் என்னை 03.06.2015 அன்று விசாரித்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை. என்னுடைய கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் மார்டின் பிரேம்ராஜ் பற்றி சொல்லவில்லை. அதில் ஜீபில் அழைத்துச்சென்றதாக சொல்லவில்லை.

அதில் என்னை ஒரு அறையிலும், என் கணவரை மற்றொரு அறையிலும் விசாரித்ததாக சொல்லவில்லை. அலறல் சத்தம் கேட்டது என்றும், அது என் காதில் விழுந்தது என்றும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. அதில் எனது கணவரை போலீசார் முட்டியில் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னை பெண் போலீஸ் விசாரித்ததாக அந்த வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் இல்லை.

எனது கணவர் மற்றும் அவரது நண்பர்களை போலீசார் ஆட்கொணர்வு மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததின் அடிப்படையில் அழைத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய கு.வி.மு.ச.161 வாக்குமூலத்தில் ஷமீல் பாஷா என்பவர் போலீசார் அடித்ததால் இறந்துவிட்டதாக நான் செய்தித்தாளில் பார்த்து தெரிந்துகொண்ட விவரம் உள்ளதா என்றால் இல்லை.

நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுக்க என்னை யார் அழைத்துச்சென்றார்கள் என்றால் ஒரு போலீஸ்காரர் வந்து நீதித்துறை நடுவரிடம் வரவேண்டும் என்று சொல்லி கையெழுத்து வாங்கிக்கொண்டு போனார்.

அது தொடர்பாக எந்த ஒரு எழுத்து மூலமான தகவல் அழைப்பாணை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் தரும்போது 03.06.2015 அன்று போலீசார் என்னை விசாரித்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை.

எனது கணவரை போலீசார் அடித்தது பற்றி அதில் இருக்கிறதா என்றால் இல்லை. அலறல் சத்தம் கேட்டது அதில் உள்ளதா என்றால் இல்லை. என் கைப்பட போலீசார் எதையும் எழுதிக்கொடுத்துவிட்டு செல்லுங்கள் என்று சொல்லவில்லை. நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் மார்டின் பிரேம்ராஜின் பெயரை பற்றி ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

மேற்கண்ட கு.வி.மு.ச.பிரிவு 161 மற்றும் நிதித்துறை நடுவர் முன் சொல்லாத செய்திகளை நான் போலீசாரோ அரசு வழக்கறிஞரோ சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றால் இல்லை. போலீஸ் மற்றும் நிதித்துறை நடுவர் முன் சொல்லாத செய்திகளை தற்போது அரசு வழக்கறிஞர் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நான் பரிதா ஷூ கம்பெனியில் வேலை பார்த்ததற்குண்டான எழுத்து மூல ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. அந்த கம்பெனியில் சம்பளம் வாங்கியதற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த பவித்ரா அந்த கம்பெனியில் எப்போது வேலைக்கு சேர்ந்தார் என்று தெரியாது.

நான் ஷூ கம்பெனியில் கட்டிங் மாஸ்டராக இருந்தேன். பவித்ரா Staff ஆக வேலை பார்த்தார். அங்கு என்னுடைய வேலை எட்டு மணி நேரம் ஆகும். நான் செய்த கட்டிங் வேலை தொடர்ந்து நின்றுக்கொண்டே செய்யும் வேலை. என்னுடைய வேலை பிரிவும், பவித்ராவின் வேலை பிரிவும் ஒன்றுதான். எங்களுடைய கம்பெனிக்கு ஷமீல் பாஷா வரும்போது அவருடன் ஓட்டுநர் மட்டுமே இருப்பார். பவித்ராவின் குடும்ப சூழல் பற்றி எதுவும் தெரியாது. பவித்ராவின் சித்தி அதே ஷூ கம்பெனியில் வேலை பார்த்தார்.

சிபிசிஐடி விசாரணையில் பவித்ரா அவரது கால் கொலுசை அடமானம் வைத்து எனக்கு குடும்ப செலவுக்கு பணம் கொடுத்ததற்கான அத்தாட்சி எதையும் தாக்கல் செய்யவில்லை. என்னை விசாரித்த பெண் போலீசாரின் பெயரையும், பதவியையும் சொல்லவில்லை. போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.00 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.21 17:19:26 +0530